

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி

ஆண்டறிக்கை

2019

இல.27, மெல்போர்ன் அவினியு, கொழும்பு - 04, சிறிலங்கா.
தொலை. +94 11 523 2583 பெக்ஸ் : +94 11250 0674
மின்னஞ்சல்: infos garslanka @gmail.com


இன்பகரமான வெற்றியின்
பயணத்தின் ஆரம்பம்.

உள்ளடக்கம்

எமது தத்துவம், நோக்கு, குறிக்கோள்கள், மூலோபாயங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு	4
நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள்	6
தலைவர் கூற்று	8-9
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கூற்று	10
இடர் முகாமைத்துவம்	11
எமது கலாச்சாரம் மற்றும் விழுமியங்கள்	13
உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கை	14
பணிப்பாளர் சபை	16-17
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் நிறுவகக் கட்டமைப்பு	19-22
சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை	23-32
விரிவான வருமானக் கூற்று	33
நிதி நிலைமை கூற்று	34
உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று	35
காசுப் பாய்ச்சல் கூற்று	36
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்	37-57
கூறாக்கப்பட்ட நிதி தகவல்கள் - பெல்வத்த மற்றும் செவனகல	58-65
வரைபடங்களுடன் கூறாக்கப்பட்ட ஒப்பீடு - பெல்வத்த மற்றும் செவனகல	66
செயன்முன்னேற்ற அறிக்கை	67-70
கூட்டமைப்புத் தகவல்	71

எமது தத்துவம்

கிராமியப் பொருளாதார முன்னேற்றத்தினூடாக தேசிய அபிவிருத்திக்குப் பங்களித்து, சீனியை அடிப்படையாகக் கொண்ட விவசாய மற்றும் கைத்தொழில் சார்ந்த விவசாயிகளின் சமூக பொருளாதாரத்தை உயர்த்துதல்.

எமது தொலைநோக்கு

சீனி உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்

எமது நோக்கங்கள்

பணி இலக்கு 333 – குறுங்காலம் (3 வருடங்கள் 2022 அளவில்)

1) 65,000 மெட்டிக் தொன் சீனி உற்பத்தியை அடைதல்
2) 15,000 விவசாயக் குடும்பங்களிற்கு உதவுதல்.
3) 55,000 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பளித்தல்
4) தலா ஒரு விவசாய குடும்பத்தின் தேறிய வருமானத்தை ரூபா 40,000 வரை உயர்த்தல்.
5) தேசிய சீனித் தேவைப்பாட்டில் 15மூ பங்களித்தல்
6) ரூபா 2 பில்லியன் தேறிய வருமானத்தை எய்தல்
7) ரூபா 20 பில்லியன் பெறுமதியான அன்னிய செலாவணியைச் சேமித்தல்.
8) 45 மெகாவோட் மின்சக்தியை துணை உற்பத்தி செய்தல்

பணி இலக்கு 555 – நீண்ட காலம் (5 வருடங்கள் 2024 அளவில்)

1) 75,000 மெட்.தொன் சீனி உற்பத்தியை அடைதல்
2) 20,000 விவசாயக் குடும்பங்களிற்கு உதவுதல்.
3) 60,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பளித்தல்
4) தலா ஒரு விவசாய குடும்பத்தின் தேறிய வருமானத்தை ரூபா 45,000 வரை உயர்த்தல்.
5) தேசிய சீனித் தேவைப்பாட்டில் 40மூ பங்களித்தல்
6) ரூபா 2 பில்லியன் தேறிய வருமானத்தை எய்தல்
7) ரூபா 20 பில்லியன் பெறுமதியான அன்னிய செலாவணியைச் சேமித்தல்.
8) 60 மெகாவோட் மின்சக்தியை துணை உற்பத்தி செய்தல

மூலோபாயங்கள்

1) வெற்றி - வெற்றி வியாபாரப் பங்குடமைக்கான எமது விவசாயி சார்ந்த வளர்ப்பு மாதிரி
2) நன்றாக விளையும் வகைகளுடன விளைச்சலை விருத்தி செய்து, வினைத்திறன்மிக்க விஸ்தரிப்பு சேவைகளுடனான சிறந்த கமத்தொழில் செயன்முறைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு சிறந்த பலன்களை உறுதிப்படுத்தல்.
3) அளவுகள், தர உற்பத்தி ஊக்குவிப்புகளின் மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல்.
4) செயலாற்றல் சார்ந்த திட்டங்களின் மூலமும் உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் மூலமும் பதவியணியை ஊக்குவித்தல்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

இலங்கை சீனி ஆராய்ச்சி நிறுவகத்தின் ஒருங்கிணைப்புடன் கரும்பு மற்றும் சீனி உற்பத்தித் திறன் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு

கரும்புச் செய்கையாளர்களின் பெறுமதியை நாம் அதிகரிக்க வேண்டியதுடன் நாம் தொழிற்படும் சுற்றாடலிற்கும் சமூகத்திற்கும் பெறுமதி சேர்க்க வேண்டும் என நாம் நம்புகின்றோம்.




SUGAR FACTORY SEVANAGALA


PELWATTE SUGAR
DISTILLERIES (PVT) LTD

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி

நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள் - 2019

(தொகைகள் மில்லியன் ரூபாய்களில் அமைந்துள்ளன)	2019	2018	2017
நிதிசார் முக்கிய அம்சங்கள்			
புரள்வு	7,545.53	6,242.95	7,616.94
விற்பனைக் கிரயம்	(7,522.96)	(5,025.82)	(6,102.70)
மொத்த இலாபம்	22.57	1,217.13	1,514.24
வரிக்கு முன்னரான தேறிய இலாபம்	(1,312.21)	144.34	402.70

தொழிற்படுசார் செயலாற்றுகை	2019	2018	2017
காணிப் பயிர்ச்செய்கை			
பயிர்செய்யக் கூடிய பகுதி (ஹெக்டேயர்)	13,867	13,831	14,265
பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பகுதி (ஹெக்டேயர்)	11,842	12,175	12,622
பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பகுதியின் சதவீதம் (%)	85%	88%	88%

அறுவடை நிகழ்வுத் திட்டம்	2019	2018	2017
அறுவடை செய்யப்பட்ட கரும்பு - மெற்றிக் தொன்	563,546	611,519	589,139
கடந்த ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு.்.(குறைவு) சதவீதம்	-8%	4%	-9.52%
கரும்பு விளைச்சல் சதவீதம் (%)	7.31%	6.99%	7.27%

சீனி உற்பத்தி	2019	2018	2017
உற்பத்தி மெற்றிக் தொன்களில்	41,175	42,770	42,822
தலா ஒரு வருடத்திற்கு தலா ஒரு நபருக்கான தொன்	8.12	9.05	9

மனித மூலவளங்கள்	2019	2018	2017
நிரந்தர	1,257	1,295	1,151
ஒப்பந்த	1,595	1,277	1,232
ஆமைய	2,186	2,065	2,131
பருவகால	-	-	-
பயிலுனர்	32	89	111
மொத்த எண்ணிக்கை	5,070	4,726	4,825



இனிப்பான வெற்றியானது

வானத்தைச் சென்றடைவதால்

தலைவர் கூற்று



வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடனான ஆண்டறிக்கையை பணிப்பாளர் சபை சார்பாக சமர்ப்பிக்கப்படுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கம்பனியின் மீளாய்வாண்டு, செயலாற்றுகையைப் பாதிக்கத்தக்க ஏராளமான பேரண்ட மற்றும் சிற்றண்டப் பொருளாதாரக் காரணிகளுடன் சவால் மிக்கதாக இருந்தது. எனினும், பாதகமான காலநிலை நிலமைகளுக்கு மத்தியில் கரும்பு விளைச்சல் தலா ஒரு ஹெக்டேயருக்கு 59.64 மெட்ரிக் தொன்னில் இருந்து 55.35 மெட்ரிக் தொன் வரை வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், சீனி மீட்பு வீதம் 6.99% இருந்து 7.31% வரை வீழ்ச்சி உற்றிருந்தமை உற்பத்தி அளவில் தாக்கம் ஏற்படுத்தியிருந்தது.

பொருளாதாரச் சூழல்

பல உலகளாவிய மற்றும் உள்நாட்டு சவால்களுக்கு மத்தியில், 2018 ஆம் ஆண்டு 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, 2019 ஆம் ஆண்டு இலங்கையின் மெய்ப் பொருளாதார வளர்ச்சி வேகமான 2.3 சதவீதத்தினால் தீடீர் வளர்ச்சியடைந்திருந்தது. பொருளாதாரத்தில் அனைத்து முக்கிய துறைகளும் சாதகமான நிலைமை பதிவு செய்யப்பட்டிருந்தன ஆனால் இடைத்தர வளர்ச்சி வீதமாக காணப்பட்டது. விவசாயத்துறையானது 2018 ஆம் ஆண்டின் 6.5 சதவீமான வளர்ச்சியினை ஒப்பிடும் போது, 2019 ஆம் ஆண்டில் 0.6 சதவீதமான வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டில் விவசாயத்துறை முகங்கொடுத்த சாதகமற்ற காலநிலைமைகள் பாதிப்புக்களில் குறிப்பிடத்தக்க சுருக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையில் கைத்தொழல் துறை கடந்த ஆண்டு 1.2 சதவீத வளர்சியுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் 2.7 சதவீதமான வளர்ச்சியினை பதிவு செய்திருந்தது. கைத்தொழில்துறையின் வளர்ச்சிக்கு முக்கியமாக ஜவுளி உற்பத்தி, ஆடை மற்றும் தோல் பொருட்கள் அணிதல், உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்களின் உற்பத்தி மற்றும் கட்டுமானம் மற்றும் சுரங்கம் மற்றும் குவாரி நடவடிக்கைகளின் மறுமலர்ச்சி ஆகியவை முக்கியமாக துணைபுரிந்தன. சேவைத் துறையின் வளர்ச்சி 2019 ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாக கணிசமாகக் குறைவடைந்திருந்தது.

கைத்தொழில் கண்ணோட்டம்

முன்னைய ஆண்டில் அதன் மந்தநிலையிலிருந்து மீண்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் சீனி உற்பத்தி 2.3 சதவீதமான 52,304 மெற்றிக் தொன்னினால் அதிகரித்திருந்தது. வரண்ட காலநிலை மற்றும் வெள்ளை இலை நோய் வெடிப்பு இருந்தபோதிலும், சீனித் தொழிற்காலைகள் வெளி விவசாயிகளின் நடுகை நடவடிக்கைகளை விரிவுபடுத்த முடிந்ததன் விளைவாக 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி மட்டமானது அதிகரித்திருந்தது. பிழிவதற்கு கரும்பு அதிக அளவில் கிடைத்தினாலும், 2019 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட சீனி மீட்பு விகிதங்கள் மூலம் உற்பத்தி முக்கியமாக அதிகரித்திருந்தது. அனைத்து சீனி தொழிற்சாலைகளுக்கான சராசரி சீனி மீட்பு விகிதம் 2018 ஆம் ஆண்டின் 7.1 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 7.2 சதவீதமாக அதிகரித்திருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட சராசரி புரள்வு மற்றும் அறுவடையின் அளவு காரணமாக, அனைத்து தொழிற்சாலைகளிலும் அறுவடை செய்யப்பட்ட கரும்புகளின் மொத்த அளவு 5.8 சதவீதமான 600,130 மெற்றிக் தொன்னாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், தனியார் பயிர்ச்செய்கையாளர்களின் அறிக்கையின் பிரகாரம் தொழிற்சாலைகளுக்கு கரும்பு வழங்கப்படுவது 2019 ஆம் ஆண்டில் 6.1 சதவீதமான 171,174 மெற்றிக் தொன்னாக குறைவடைந்துள்ளது. கரும்பு உற்பத்தியை வெளிமாநிலங்களில் பயிரிடுவதன் மூலம் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான பரந்த சாத்தியக்கூறுகள் காணப்பட்டுள்ளன, அனைத்து சீனி தொழிற்சாலைகளும் தற்போதுள்ள உற்பத்தியாளர் திட்டங்களின் விரிவாக்கத்திற்கு அதிக முன்னுரிமை அளித்திருந்தன. இதற்கிடையில், 2019 ஆம் ஆண்டில் சீனி இறக்குமதி 13.7 சதவீதமானது 556,270 மெற்றித் தொன்னாக காணப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டு ஒன்பது சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2019 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சீனித் தேவையில் அண்ணளவாக எட்டு சதவீதத்தை பூர்த்தி செய்ய உள்நாட்டு சீனி உற்பத்தி போதுமானதாக காணப்படுகின்றது.

கம்பனி செயலாற்றல்

செவனகல தொழிற்சாலையின் மொத்த சீனி உற்பத்தியானது கடந்த வருடத்தின் 14,709 மெட்ரிக் தொன்களுக்கு ஒப்பாக, 2019 ஆம் ஆண்டின் போது 16,013 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டது. பெலவத்த தொழிற்சாலையின் உற்பத்தியானது 25,162 மெட்ரிக் தொன்கள் வரையிலும் 10 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கான இலங்கை சீனிக் கம்பனியின் மதிப்பிடப்பட்ட பங்கானது 85 சதவீதம் ஆகும். ஈஎன்ஏ உற்பத்தியானது 2018 ஆம் ஆண்டின் போது 9,787,942 லீட்டர்களிலிருந்து, 2019 ஆம் ஆண்டில் 5,212,559 லீட்டர்கள் வரை குறைவடைந்துள்ளது.

நலன்புரி

ஆண்டின் போது நலன்புரிக்காக கணிசமான தொகையைக் கம்பனி செலவிட்டிருந்தது. காப்பகத்திற்காகவும் உட்கட்டமைப்பிற்காகவும் வேறான உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். கம்பனியால் தொழிலாளர் குடும்பங்களின் குழந்தைகளுக்கான பாடசாலைப் போக்குவரத்தையும் வழங்கியிருந்தது. கம்பனியால் ஆரம்பப் பாடசாலையும் குழந்தைகள் காப்பகமும் பராமரிக்கப்படுகின்றது.

எதிர்கால நோக்கம்

முன்னோக்குகையில், இலங்கைப் பொருளாதாரம் வேகமாக முன்னோக்கிச் செல்வதுடன் அதன் அபிவிருத்தி இலக்குகளையும் அடைவதற்கு உள்ளது. எதிர்பார்க்கப்படுகின்றது.. அரசாங்கக் கொள்கைகளும் வட்டி வீத வீழ்ச்சிகளும் புதிய முதலீட்டு மாற்றீடுகளை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றன. எமது உற்பத்திக்கென ஓர் திட்டவட்டமான வியாபாரப் பொருள் சந்தை உள்ளது. கரும்பிற்கான உற்பத்திப் பகுதியை அதிகரிப்பதில் தொடர்ந்தும் சபை கவனம் செலுத்தி வருகின்றது. சிறந்த விளைவைப் பெறுவதற்கு தற்போதுள்ள விவசாயிகளை ஊக்குவிப்பதும் புதிய விவசாயிகளைக் இத் துறைக்குள் கொண்டுவருவதும் அவசியமாகும்.

புதிய காணி நிலங்களை உள்ளீர்த்து எமது சொந்த பயிர்ச் செய்கை உற்பத்தித் திறனை அதிகரிப்பது முக்கியமானதாகும். பிரதான உற்பத்திப் பொருளுக்கு மேலதிகமாக எமது தொழிற்பாட்டின் அதிகூடிய நன்மையை அடைவதற்கு துணை உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்வதிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

பாராட்டு

2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியிலும் கடந்த காலப்பகுதியிலும் தங்கள் அரிய பணிகளையும் பெறுமதிமிக்க பங்களிப்பையும் வழங்கியிருந்த முன்னைய பணிப்பாளர் சபைக்கும் கம்பனியின் முகாமைத்துவத்திற்கும் உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கம்பனியுடன் எப்போதும் கைகோர்த்து செயற்பட்டமைக்காக கரும்புச் செய்கையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும், சீனி மொத்த விற்பனை வணிகர்களுக்கும், வங்கியாளர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ராஜீவ் செனவிரத்ன
தலைவர்

பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கூற்று



அனைத்து அக்கறையுடைய தரப்பினருக்கும்,

வியாபாரச் சூழல்

2019 ஆம் ஆண்டானது கம்பனிக்கு சாதகமான தாக்கங்களை ஏற்படுத்திய கலவையான தாக்கங்களை ஏற்படுத்திய வருடமாக அமைந்திருந்தது. ஆண்டினுள் நிலவிய பாதகமான காலநிலை காரணமாக சீனி உற்பத்தியானது 1,595 மெட்றிக் தொன்களால் குறைவடைந்திருந்த அதேவேளை, ஈஎன்ஏ உற்பத்தியானது 4,575,383 லீட்டர்களால் குறைவடைந்திருந்தது. ஆண்டினுள் சீனியின் ஒரு கிலோ கிராமிற்கான விலையாக ரூபா 95.39 மற்றும் ஈஎன்ஏ ஒரு கிலோ கிராமின் விலையாக ரூபா 374-எனும் சராசரி விலையினை கம்பனியால் பேணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டினுள் கம்பனியின் வருமானமானது ரூபா 7,546 மில்லியனாக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அது ரூபா 6,243 மில்லியனாக காணப்பட்டது. கம்பனியால் 2018 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபமாக ரூபா 144 மில்லியன் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2019 ஆம் ஆண்டின் போது வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு நட்டமாக ரூபா. 1,312 மில்லியனாக பதிவு செய்யப்பட்டது. ஆண்டினுள் விற்பனைக் கிரயமானது ரூபா 2,497 மில்லியனால் அதிகரித்திருந்தது. நிர்வாகச் செலவினங்கள் ரூபா.186 மில்லியனால் அதிகரித்திருந்தன. ஆண்டினுள்ளான நிதிக் கிரயம் ரூபா. 34 மில்லியனால் அதிகரித்திருந்த அதேவேளை, நிதி வருமானமானது ரூபா 48 மில்லியனால் அதிகரித்திருந்தது.

தொழில்நுட்பம்

காசுப்பாய்ச்சலுடன் தொடர்புடைய பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினைப் பெற்றுத்தரும் முக்கியமான பணியானது தொழில்நுட்பக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. உரிய வெளிப்படைத்தன்மையான விற்பனை நடைமுறைகளை ஆராய்தல் மற்றும் நிறுவுதல், அனைத்து தொழில்நுட்பங்களையும் மதிப்பீடு செய்தல், பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் 2016 நீண்ட பிரச்சார செயலிழப்புக்கு முன்னர் 4% இற்கு மேற்பட்ட கைத்தொழிற்சாலை நட்டத்தினை ஈடுசெய்தல் இதில் உள்ளடங்கும். வடிசாலையின் தரத்துடன் தொடர்புடைய பிரசச்சினைகளை தீர்ப்பதற்காக பணிகள் விரிவுபடுத்தப்பட்டன. அறுவடையை வேகமாக பெற்றுக்கொள்வதற்காக பகுதியளவில் இயந்திரமயப்படுத்தப்பட்ட கரும்பு அறுவடை செய்வோரால் தீர்க்கப்பட வேண்டும். ஏற்றும் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டமையானது பயிர்களின் இருப்பினை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நீர்ப்பாசன திட்டம் மற்றும் மேலதிக பயிர்ச்செய்கைத் திட்டங்கள் காரணத்தால் மேலதிக பயிர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும், இயலளவினை அதிகரிக்கும் வகையிலும் தொழிற்சாலைகள் மீளமைக்கப்பட வேண்டியதாக காணப்படுகின்றது.

மனிதவளம்

நிறுவனத்தின் வெற்றியானது அதன் ஊழியர்களாலேயே வழிநடத்தப்படுகின்றது. ஊழியர்களுக்கு நிறுவனத்தின் நம்பிக்கைப் பெறுமதிகளுடன் வழிகாட்டுவதுடன், பாதுகாப்பு, எமது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சிறப்புத்தன்மை, தொடர்ச்சியான தன்மை, நிலைபேறான தன்மை மற்றும் எமது சமூகம் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. மிகவும் பெறுமதியான வளத்தினை தேக்கிவைப்பதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி இன்றியமையாதது ஆகும். அதனுள் எமது விவசாயிகளும் உள்ளடங்குவர். அதன் காரணமாக பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் தொடர்பில எதிர்வரும் வருடங்களில் முகாமைத்துவம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முகாமைத்துவத்துவம் மற்றும் அனைத்து ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சிக்கு நன்றி தெரிவிக்க நான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கின்றேன். அனைவரினதும் கூட்டு முயற்சி பாராட்டப்படுவதுடன், அனைத்து அக்கறையுடைய தரப்பினருக்கும் நலன்களை பெற்றுத்தரும் வகையில் அனைத்து சந்தர்ப்பங்களினதும் உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்வோம்.

பணிப்பாளர் / பி.நி.உ
காமினி விஜேரத்னே

இடர் முகாமைத்துவம்

இடர்களின் வகை	விபரம்	செயல்நடவடிக்கைத் திட்டம்
செயற்பாட்டு இடர்கள்	கரும்பு பயிர்ச்செய்கைக்கான காணிகளை கண்டறிதல்.	▪ கரும்பின் விலையை ரூபா 5,000 இலி இருந்து ரூபா 5,000 வரை அதிகரித்தல் ▪ விதை முற்பணங்கள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை கடன் அடிப்படையில் வழங்குதல் ▪ அரசின் உர மானியத்தின் மூலம் கரும்பு விவசாயிகளும் நன்மை பெற்றுள்ளனர்.
கடன் இடர்	விவசாயிகளுக்கு மூலப்பொருட்களை வழங்குவதன் மூலம் உருவாகும் ஐயக்கடன்.	கடனை மீள அறவிடுதல் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அதிக பொறுப்புகளை சாட்டுதல்.
பணவீக்க இடர்	மேந்தலைகள் மற்றும் மூலப்பொருள் கிரயம் ஆகியவற்றின் காரணமாக இலபத்தன்மையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள்.	உற்பத்தி திறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்தி கிரயத்தினை குறைத்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல்.
சந்தை இடர்	உள்நாட்டு சீனி இறக்குமதியாளர்களால் குறைந்த விலையில் சீனி இறக்குமதி செய்யப்படல்.	அலகொன்றிற்கான மேந்தலைக் கிரயத்தினை குறைப்பதற்காக உற்பத்தியின் அளவினை அதிகரித்தல்.
சுற்றாடல் இடர்	யானைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக கரும்பு பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் அறுவடையில் வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.	யானைக்கான அகழிகள், வேலிகள் மற்றும் மனித தடைகளை கம்பனியின் செலவில் உருவாக்குதல்.


இனிப்பான வெற்றிக்கான,
தெளிவான மார்க்கம்

எங்கள் கலாச்சாரமும் விழுமியங்களும்

எமது விவசாயிகள்

விவசாயியே எமது அரசராவர். விவசாயிகளே கம்பனியின் பிரதான, மிக முக்கியம் வாய்ந்த பங்குதாரர்களில் ஒருவர் என வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி நம்புகின்றது. விவசாயிகளால் அனேகமாக அனைத்துக் காணிகளும் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுவதனால் செவனகல பிரிவு தங்கள் சொந்த வேளாண்மைக்கென மட்டுப்படுத்தப்பட்ட காணிகளை மாத்திரமே கொண்டுள்ளமை அதற்கு பாரதூரமான காரணியாக உள்ளது.

ஒரு ஹெக்டேயர் கரும்புப் பயிர்ச்செய்கையிலிருந்தான சராசரி வருமானம் தலா ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ ரூபா 35,000 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏராளமான பகுதிகளில் கரும்புச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு குறைந்த அளவு வருமானமே கிடைத்துள்ளது. இந்த நிலை இத் துறையில் விவசாயிகள் நிலைத்திருப்பதை உற்சாகமிழக்கச் செய்து இதற்குப் பதிலாக வேறு பயிர்ச்செய்கைகளில் அவர்கள் நாடியிருந்தனர். லங்கா சீனி, இந்த நிலையை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு விவசாயிகளுக்கு தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு உதவுவதற்காக பல வழிமுறைகளை மேற்கொண்டது. தற்போது ஒரு விவசாயிக்கு தலா ஒரு மெற்றிக் தொன் கரும்பிற்கு ரூபா 5,000 கொடுப்பனவு செய்யப்படும் அதேவேளை முன்னர் தலா ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 5,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறாக, கரும்புப் பயிர்ச் செய்கை வரலாற்றில் தலா ஒரு மெற்றிக் தொன்னிற்கு ஆகக் கூடுதலான விலையை தற்போது வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியே வழங்கி வருகின்றது.

எமது வாடிக்கையாளர்கள்

எமது வாடிக்கையாளர்களே எமது எதிர்பார்ப்பாகும். எமது சனத்தொகையில் 20 மில்லியனிற்கும் மேலானவர்கள் எமது வாடிக்கையாளர்களே. அவர்களுக்கு தரமானதும் ஆரோக்கியமானதுமான சீனியை நியாய விலையில் வழங்குவதே எமது முக்கிய நோக்காகும். இலங்கையர் ஒருவரின் ஒரு வருடத்திற்கான சீனி நுகர்வு 30 முதல் 35 கிலோ வரையாக உள்ளது. எமது உற்பத்திக் கொள்ளளவு 8மூ ஆக நிலவுவதுடன் எஞ்சிய 92மூ இறக்குமதி செய்யப்பட வேண்டியதாக உள்ளது. சீனி இறக்குமதிக்காக வருடாந்தம் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலாக செலவிடப்படுகின்றது. எமது பொருளாதாரத்தில் இது ஓர் பாரிய பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்றது.

எமது ஊழியர்கள்

எமது ஊழியர்களே எமது அரிய செல்வமாகும். எந்த ஒரு நிறுவனமும் விசுவாசமானதும் ஊக்குவிக்கப்பட்ட ஊழியர்கள் இன்றி வெற்றியடைவதில்லை. தொழிற்பாட்டு விளைவுகள் எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மட்டத்தின் பிரதிபலிப்புக்கள் எனலாம். லங்கா சீனியின் ஓர் முக்கிய காரணியில் மனித வளம் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னைய காலத்தில், சீனித் துறையில் ஈடுபட்ட ஊழியர்கள் தமது வாழ்க்கையில் பலவிதமான மன நிறைவற்ற நிலைகளிற்கு தொழில் நியதிகள், மிகக் குறைந்த அளவிலான மாதாந்த வருமானம், மிகை ஊதியம் தொடர்பான பிரச்சனைகளையும் பதவி உயர்வுகள் முதலிய பிரச்சனைகளையும் எதிர்நோக்கியிருந்தனர். இக் காரணிகளைக் கருத்திற்கொண்டு லங்கா சீனிக் கம்பனி அதற்கு முன்னுரிமை அளித்து பிரச்சனைகளிற்குப் பரிகாரம் தேடத்தொடங்கியது.

நல்லாட்சி

எமது சட்டரீதியான கணக்காய்வாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமாகும்.
வெளிக் கணக்காய்வாளர்களுக்கு மேலதிகமாக, பெல்வத்த மற்றும் செவனகல ஆகிய இரு பிரிவுகளும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்களைக் கொண்டுள்ளதுடன் நேரடியாக தலைவருக்கும் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கும் நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட குழு உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகளைக் கிரமமான முறையில் மீளாய்வு செய்து வருவதுடன் சிரேஷ்ட முகாமையாளர்களிடமிருந்து விளக்கம் கோரி, அறிக்கைகளைத் தாங்கள் கண்டறியும் காண்புகளுடன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கின்றது.

தடைகள்

இன்னமும் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனைகள் உள்ளமையால் நாம் அவற்றை எதிர்காலத்தில் தீர்ப்பதற்குக் குறியாக உள்ளோம்.

பெல்வத்த மற்றும் செவனகல அமைவிடங்களில் புதிய கம்பனிக்கு உரித்தற்ற அசையும் சொத்துக்களைக் கொண்டுள்ளன. சட்டரீதியான நடைமுறைகள் பூர்த்தியாகும் வரை நாம் காத்திருந்து அவற்றை அகற்றுவதற்கோ அல்லது நடைமுறையில் உள்வாங்குவதற்கோ எதிர்பார்த்துள்ளோம்.

காணிச் சுவீகரிப்பு நடைமுறை மிகவும் மெதுவான நிலையிலேயே உள்ளதுடன் காணியில் போதிய பகுதி சுவீகரிக்கப்படும் வரையில் எமது மத்திய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட வேண்டி உள்ளன. இது முகாமைத்துவ ஆற்றஇது முகாமைத்துவ ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.

முகாமைத்துவம் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கான மூலோபாயங்களை ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. புதிய முதலீடுகளிற்கு நிதியீட்டுவது எமது இலட்சியப் பாதையில் எதிர்கொள்ளும் இன்னுமோர் சிக்கலாகும். பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளுக்கு உரிய காணிகளின் உரிமை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு உரித்தற்ற நிலையில் பெரும்பாலான வங்கிகள் பெருமளவு சொத்துக்களை ஈடாகக் கேட்கின்றன. எவ்வாறாயினும், திறைசேரியினதும் அமைச்சினதும் உதவியுடன் குறித்த நிதியை ஒழுங்குபடுத்தும் நடைமுறையில் நாம் செயற்படுகின்றோம்.

பெல்வத்தையில் உள்ள தகவல் தொழில்நுட்ப முறை, தற்போதைய செயற்பாட்டு இயக்கத்தின் தகவல்களையும் வரலாற்றுத் தகவல்களையும் கொண்டுள்ள அதேவேளை செவனகலவில், முன்னைய முகாமைத்துவம், ஊழியர்கள் தொடர்பான சகல பதிவேடுகளையும் எடுத்துச்சென்றுள்ளனர். ஆகையால், பணிக்கொடைக் கொடுப்பனவுகள், ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் தொடர்பான விடயங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. செவனகல சீனிக் கம்பனியின் முன்னைய முகாமைத்துவத்திடம் இருந்து புத்தகங்களையும் பதிவேடுகளையும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2019

கணக்காய்வுக் குழு அறிக்கை

கம்பனியின் கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவர். கணக்காய்வுக் குழுவானது நிறைவேற்றுத் தரமற்ற மூன்று அங்கத்தவர்களை கொண்டுள்ளது.

கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் இதன் தலைவரின் தேவைக்கேற்ப நிரட்படுத்தப்படுவதுடன், அவர் திறசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் சபை அங்கத்தவர் ஆவார். கணக்காய்வுக் கூட்டங்கள் பொது முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிர்வாகத்தினால் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், தலைவர், பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதம முகாமையாளர் ஆகியோர் அழைப்பின் அடிப்படையில் பங்குபற்றுவதுடன்.

கணக்காய்வுக் குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் தரம் மற்றும் ஒருமித்த தன்மை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல்களின் பொருண்மைத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய நிதி அறிக்கையிடல் செயன்முறை ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை நடைமுறைப்படுத்தல்.

கம்பனி திறைசேரியால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நீதி மற்றும் சட்டத் தேவைப்பாடுகளை கம்பனி பின்பற்றுகின்றது என்பதனையும் கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவை போதியளவில் காணப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்தும் செயன்முறைகள் மீதான பொறுப்புகளை செயற்படுத்தல்.

நிதியாண்டிற்குரிய செயன்முன்னேற்றம்

கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் அங்கீகாரம் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும்.
கணக்காய்வுக் குழுவானது கணக்காய்வு விடயப்பரப்பு, கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் அதன் செயற்திறன் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்து மேற்பார்வை செய்கின்றது.இந்த குழுவானது எல்.எஸ்.சீ.பீ.எல் இன் செயற்பாடுகளை எதிர்கால திட்டங்களுடன் மீளாய்வு செய்கின்றது.

எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வகையில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அத்துடன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயல்திறன் ஆகியவை வணிகப் பிரிவுகளின் தலைவர்கள் / கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு சரியான நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன. 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எல்.எஸ்.சி.பி.எல் இன்

நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, முகாமைத்துவத்தின் பதில்களுடன், முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், கணக்காய்வாளர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட திருப்தியற்ற பகுதிகளை திருத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளக கணக்காய்வுப் பிரிவால் இனங்காணப்பட்ட இரண்டு (02) வணிக பிரிவுகளின் உள்ளக கட்டுப்பாடுகளிலான பலவீனங்கள் மற்றும் தவறுகள் தலைமை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சி.ஓ.ஒக்களுடன் கலந்துரையாடப்பட்டன, முக்கியமான பகுதிகள் பொருத்தமான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்குதகுந்த நடவடிக்கை எடுக்கும் பொருட்டு முன்னிலைப்படுத்தப்பட்டன.

உள்ளக கணக்காய்வு பிரிவு வழங்கிய சேவைகள் மற்றும் நிறுவனத்தின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கான அவர்களின் முயற்சிகள் ஆகியவற்றுக்காக கணக்காய்வுக் குழு நன்றி தெரிவிக்க விரும்புகிறது. குழுவின் அங்கத்தவர்கள் அளித்த பங்களிப்பு நன்றியுடன் பாராட்டப்படுகிறது. நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு நிதி விடயங்கள் தொடர்பில் அவர்களின் அனுபவம் மற்றும் திறமை ஆகியன விலைமதிப்பற்றது.

டி.வி.வீரசேன
தலைவர் - கணக்காய்வுக் குழு

இனிப்பான வெற்றிக்கான
தெளிவான மார்க்கம்



பணிப்பாளர்களின் விபரம்



தலைவர்
திரு.ராஜீவ் சஞ்ஜயா சேனவீரத்ன



பணிப்பாளர்/பிரதி நிறைவேற்று உத்தியோகத்தர்
திரு.திஸ்ஸ காமினி விஜேயரத்ன



பணிப்பாளர்
திரு.துஷாராநம்பத் பெரேரா



பணிப்பாளர்
திரு. ரோஹனா சமிந்த ரத்நாயக்க



பணிப்பாளர்
திரு.அலுத்கே நந்தசேன

இயக்குனர்களின் சுய விபரக்கோவை

தலைவர்

திரு.ராஜீவ் செனவிரத்ன

திரு. ராஜீவ் செனவிரத்ன அவர்கள், ஐ.ரீ.யூ. கன்வென்ஷன் மலகா-டெர்ரெமோலின்ஸ் உடன் இணைக்கப்பட்டுள்ள வானொலி மற்றும் தொலைத்தொடர்புகள் பட்டத்தில் விசேட வகுப்பினை கொண்டுள்ளார்.
அவர் பெருந்தெருக்கள் மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழான மக நெகும ரோட் கன்ஸ்ட்ரக்ஷன் இக்குயிப்மன்ட் கம்பனியின் தலைவர்.்நிர்வாகப் பணிப்பாளராக 2015 மார்ச் மாதம் முதல் 2018 யூலை மாதம் வரையிலும் பணியாற்றியுள்ளார்.

அவர் தற்போது, 2012 ஆம் ஆண்டு முதல் "மெனேஜ்ட் செக்யூரிட்டி சேர்விசஸ்" (எம்எஸ்எஸ்) மற்றும் "மெனேஜ்ட் டிடெக்ஷன் ரெஸ்போன்ஸ்" (எம்டீஆர்) மற்றும் இன்போர்மேஷன் சைபர் செக்யூரிட்டி சேர்விசஸ் கன்சல்டன்சி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள எம்.்.எஸ் ஈசைபர்செக் (பிரைவேட்) லிமிடட் கம்பனியின் வணிக அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் பிரிவின் நிறைவேற்று இயக்குநராக கடமையாற்றி வருகின்றார்.

பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

திரு.காமினி விஜேரத்ன

திரு. காமினி விஜேரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றவர் ஆவார். அதற்கு மேலதிகமாக அவர் கீழ்வரும் பதவிகளை வகித்துள்ளார்.

- பணிப்பாளர் – வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், ஊவா மாகாணம்
- ஆலோசகர் - வர்த்தகம், கைத்தொழில் மற்றும் விவசாய சம்மேளனம், மொனராகலை மாவட்டம்
- உப தலைவர் - வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், ஊவா மாகாணம்
- ஆலோசகர் – சுற்றுலா அமைச்சு

பணிப்பாளர் சபை

திரு.துஷார சம்பத் பெரேரா

திரு. துஷார சம்பத் பெரேரா அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணக்கியலில் வணிக இளமானிப் (சிறப்பு) பட்டமும், களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். இவர் இலங்கை கணக்கியல் சேவையில் 17 வருட அனுபவம் கொண்டவர் ஆவார்.

திரு.ரோஹன சமிந்த ரத்நாயக்க

திரு. ரோஹன சமிந்த ரத்நாயக்க அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளங்கலை (விசேட) பட்டம் பெற்றுள்ளார். அவர் பிரிண்டர் எஸ்டாபிளிஷ்மெண்ட் (பிரைவேட்) லிமிடெட்டின் நிர்வாக இயக்குநர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆவார்.

திரு அலுத்கே நந்தசேன

திரு.அலுத்கே நந்தசேன அவர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் செயற்திட்ட ஆலோசகராக கடமையாற்றியுள்ளார்.



இனிமையான வெற்றிக்கான

வழங்கல் நேரம்

உயர் மட்ட முகாமைத்துவக் குழு மற்றும் தலைமையகத்தின் நிறுவனக் கட்டமைப்பு



தலைவர்
திரு.ராஜீவ் சஞ்ஜயா சேனவீரத்ன



பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்கள்
திரு.திஸ்ஸ காமினி விஜேயரத்ன



சீஓஓ (பதிற்கடமை) – பெல்வத்த
திரு. டி.எம்.எஸ். பண்டாரா



சிஓஓ – செவனகல
திரு. ஆர்.எஸ். ஜயரத்ன




பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)
திரு. நிஷாந்த ஆசிரி பெர்னாண்டோ




பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை/சந்தைப்படுத்தல்)
திரு சஹதேவ

பெலவத்த - நிறுவனக் கட்டமைப்பு



நிறுவனத்தின் கட்டமைப்பு - செவனகல



முகாமைத்துவக் குழு - பெல்வத்த



பிரதி பொது முகாமையாளர் (தொழிற்சாலை)
ஆர்.எம்.டபிள்யூ. ஹேமகுமார



பிரதி பொது முகாமையாளர் பதிற்கடமை (டிஸ்டில்லரி) / உற்பத்தி முகாமையாளர்
ஆர்.எம்.ஜே. பண்டாரா



சீஒஓ (பதிற்கடமை) – பெல்வத்த
திரு. டி.எம்.எஸ். பண்டாரா

முகாமைத்துவக் குழு - செவனகல



பொது முகாமையாளர்
கே.ஏ. வால்டர்



பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்சாலை)
டி.கே.டபிள்யூ. டி சில்வா



பிரதிப் பொது முகாமையாளர் (விவசாயம்)
எச்.எம்.எஸ். சமரவீர

பீஏஎல்/எவ்/எல்எஸ்சீ/01/19/24
2022 யூன் 20

தலைவர்,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனி.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் ("கம்பனி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்படும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பந்தியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் பெற்றுக்கெள்ள முடியாதிருந்தது.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 66 (இ) ஆம் பந்தியின் பிரகாரம், அறிக்கையிடப்படும் காலப்பகுதி முதல் 12 மாத காலப்பகுதியினுள் முதிர்வடையும் சொத்துக்கள் மாத்திரம் நடைமுறைச் சொத்துக்களாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், பெலவத்த பிரிவின் 2024 ஏப்ரல் 22 ஆந் திகதி முதிர்வடையும் ரூபா 43,544,918 ஆன நிலையான வைப்பொன்று மற்றும் செவனகல பிரிவின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முதிர்வடையும் ரூபா 100,000,000 ஆன நிலையான வைப்புக்கள் 03 நிதி சிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளில் முறையே ரூபா 1,027,194,679 மற்றும் ரூபா 230,931,560 ஆன விவசாயக் கடன்களுக்காக முறையே ரூபா 499,299,398 மற்றும் ரூபா 9,242,963 ஆன ஐயக்கடன் ஒதுக்கங்களுக்குரிய கணக்கீட்டு நியமம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செவனகல பிரிவின் 2019 ஆம் ஆண்டினுள் கிடைத்த நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் ரூபா 65,771,479 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் பெற வேண்டிய வட்டியும் உள்ளடங்களாக அந்த பெறுமதி ரூபா 113,015,414 எனுமாறு ரூபா 47,243,935 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெல்வத்த பிரிவின் கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்கள் மங்ளும் விவசாய உபகரணங்கள் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கைகள் பூரணமற்றது என்பது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது வரையிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது

சுவீகரித்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட புத்தகப் பெறுமதிகள் அவ்வாறே கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் அவ்வாறே காணப்படுவதாகவும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கிய கிரயம் ரூபா 4,334,737,840 மற்றும் தேறிய பெறுமதி ரூபா 1,547,310,647 ஆன சொத்துக்கள் சரியானது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையற்ற சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த பெல்வத்த பிரிவின் பா 842,146,226 மற்றும் செவனகல பிரிவின் ரூபா 99,511,282 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டதுடன், அந்த மதிப்பீட்டு வழுவானது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 02 முதல் 05 வருட காலமாக அரச நிறுவனங்கள் மற்றும் அரச கம்பனிகளிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 19,498,293 தொகை உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 21,498,293 ஆன கடன் மீதிகளுக்கு மற்றும் 2021-2019 காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு செவனகல பிரிவு மற்றும் பெல்வத்த பிரிவிற்கு மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 602,278,903 மற்றும் பெல்வத்த பிரிவு தலைமை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 50,324,632 தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்குரிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கம்பனிக்கு எதிராக ஊழியர்கள் மற்றும் வெளிவாரித் தரப்பினரால் தொடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டவாறு உள்ள வழக்கு, பெல்வத்த பிரிவிற்கு 13, செவனகல பிரிவிற்கு 12 மற்றும் தலைமை அலுவலகத்திற்கு 03 எனுமாறு 28 கூட்டுத்தொகையாக காணப்பட்டதுடன், அந்த வழக்குகளின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 84, 85 மற்றும் 86 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புகளுக்காக நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ள அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 இன் 43 ஆம் இலக்க குறைவான செயலாற்றலுடைய முயற்சிகள் அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்களை புனரமைக்கும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செவனகல பிரிவிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த காணி 469.1674 ஹெக்டேயர் மற்றும் அந்த காணிகளில் அமைந்திருந்த கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் மறறும் இயந்திரங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட்டிராமையால் பயன்படுத்தப்பட்டவாறு காணப்படும் கட்டிடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்குனிய பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015, 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செவனகல பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்ட காபன் டயோக்சைட் வாயுவினை கொள்வனவு செய்த தனியார் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 17,770,596 தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) செவனகல பிரிவின் நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டுக்காக செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 2,229,383 எனுமமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 3,455,540 ஆகும். அதன் பிரகாரம், ரூபா 1,226,157 ஆன வரித் தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அந்த பெறுமதியிலிருந்து மீளாய்வாண்டின் நிதிகூற்றுக்களில் செலவினங்கள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) செவனகல பிரிவிற்குரிய 2018 ஆம் ஆண்டிற்குரியதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டண வரி ரூபா 11,110,023 தொகை அந்த பிரிவினால் 2019 மே 24 ஆந் திகதி தலைமை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட போதிலும், அது தவறாக தொடர்புடைய தரப்பினருக்கான கொடுப்பனவாக அந்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், தலைமை அலுவலகத்தினால் அந்த வரித் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாது, செவனகல பிரிவிலிருந்து பெற வேண்டிய தொகைகளுக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ந்து கம்பனி விடுவிக்கப்பட்டுள்ள போது கடந்த வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 13,922,835 ஆன வற் வரி அறவிட்டு அதன் செலவினங்களின் அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூபா 10,156,443 ஆன வற் வரி கணக்குகளிலிருந்து எதிரீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக கம்பனியின் செலவினங்கள் ரூபா 10,156,443 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) செவனகல பிரிவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், விவசாயிகளிடமிருந்து பெற வேண்டிய கடனின் அளவானது ரூபா 230,931,560 ஆன போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் தொகை ரூபா 228,713,938 ஆன போதிலும், காலப் பகுப்பாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் தொகை ரூபா 230,202,208 தொகையுமாக காணப்பட்டமையால் முறையே ரூபா 2,217,622 மற்றும் ரூபா 729,352 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், விவசாயக் கடன் பட்டோலையிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளிலிருந்து ரூபா 1,488,265 ஆன செலவின மீதி எதிரீடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) செவனகல பிரிவின் 07 பேரேட்டுக் கணக்குகளின் கடந்த வருடங்களின் ரூபா 1,890,879,751 ஆன மீதிகளின் கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 1,890,381,939 எனுமாறு ரூபா 497,862 இனால் குறைத்தும், 04 பேரேட்டுக் கணக்குகளின் கடந்த வருடங்களுக்குரிய ரூபா 1,932,921,284 மீதிகளின் கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 2,293,463,140 எனுமாறு ரூபா 360,541,856 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், கடந்த வருடத்தின் இறுதியில் உள்ளபடியான மீதியொன்று இல்லாதிருந்த 08 செலவின மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 475,703 ஆன ஆரம்ப வரவு மீதிகளும், ஒரு செலவின கணக்கின் ரூபா 2,428,800 ஆன ஆரம்ப செலவின மீதியும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலம், அவ்வாறு மேற்கொள்ளாது 2018 ஆம் ஆண்டின் கொடுக்கல் வாங்கல்கள் 2019 ஆம் ஆண்டினுள் கணக்கீட்டு கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டமையால் இந்த வழு இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஙா) சீனி மற்றும் சீனியுடன் தொடர்புடைய உற்பத்திகளின் அடிப்படையில் வற் வரி அறவிடப்படுவதிலிரு
(கி) செவனகல பிரிவின் நடைமுறை பணிகளின் பெறுமதியான ரூபா 29,932,255 தொகை தவறுதலாக வகைப்படுத்தப்பட்டு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் சேர்க்கப்பட்டு ஒரு உருப்படியாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) செவனகல பிரிவிற்குச் சொந்தமான ரூபா 285,000,000 ஆன 07 நிலையான வைப்புக்கள் வங்கிக் கடன், வங்கி மேலதிகப்பற்று வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக பிணையாக வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கு) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செவனகல பிரிவின் நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்புகளின் பெறுமதி ரூபா 788,059,004 ஆன போதிலும், நிலையான வைப்புகளின் பட்டோலையின் உள்ளடக்கப்பட்ட 19 வைப்புகளின் பெறுமதி ரூபா 711,059,003 ஆகும். பெறுமதி ரூபா 45,000,000 ஆன 02 நிலையான வைப்புகள் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிராததுடன், ரூபா 23,000,000 ஆன 02 வைப்புகளுக்காக கம்பனிக்கு சொந்தமான வைப்புகளை புதுப்பிக்கும் கட்டளை காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(கூ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செவனகல பிரிவின் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 501,069,784 இற்கு பதிலாக, பேரேட்டின் பிரகாரம் பெறுமதியான ரூபா 825,392,789 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, ரூபா 385,097 பெறுமதியான 174 இருப்பு உருப்படிகளின் பற்றாக்குறையொன்று மற்றம் 565,010 பெறுமதியான 180 உருப்படிகளின் மிகையொன்று காணப்படுவதாகவும், பயன்படுத்த முடியாத மற்றும் கைத்தவிர்க்கப்பட வேண்டிய ரூபா 6,388,008 பெறுமதியான 825 இருப்பு உருப்படிகள் மற்றும் இருப்பு அட்டைகளில் உள்ளடக்கப்படாத பெரும் எண்ணிக்கையிலான பொருட்கள் களஞ்சியத்தில் காணப்படுவதாகவும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும், பெறுவனவுகள் கணக்கு வைக்கப்படாத இருப்பிலிருந்து விநியோகிக்கப்பட்டமையால் 04 இருப்பு பேரேட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 235,709,044 ஆன செலவு மீதியொன்று காணப்பட்டமையால், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 825,392,789 ஆன இருப்பு பெறுமதியின் சரியானதன்மை தொடர்பில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(கெ) கம்பனியின் தலைமை அலுவலகத்தின் நிர்வாகச் செலவினம் ரூபா 51,804,587 இற்கு உரிய செலவினங்கள் தொடர்பான விபரங்கள் முன்வைக்கப்பட்டிராத காரணத்தால், அதன் சரியானதன்மை தொடர்பில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(கே) பெல்வத்த பிரிவின் பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள் மூலம் 13 பேரேட்டுக் கணக்குகளின் 1,945 வரவுப் பதிவுகள் மூலம் பதிவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 31,000,651 மற்றும் 47,981 எண்ணிக்கையான செலவினப் பதிவுகளின் மூலம் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 677,211,106 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களுக்காக அடிக் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டிராத காரணத்தால் அந்த கொடுக்கல் வாங்கல்களை இனங்காண முடியாதிருந்தது.

(கை) பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம், ரூபா 3,178,861,066 கிரயமான தளத்தின் இயந்திர உபகரணங்கள் (குத்தகை சொத்துக்களும் உள்ளடங்கலாக), நீர்ப்பாசன மற்றும் நானாவி உபகரணங்கள் மற்றும் தொழிற்சாலை மின்கூடம் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு வீதம் முறையே 15 சதவீதம், 6 சதவீதம் மற்றும் 5 சதவீதமாகவும் காணப்பட்டதுடன், உட்கட்டமைப்பு வசதிகளுக்காக பெறுமானத்தேய்வு வீதம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், அந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 1,618,821,687 ஆன சொத்துக்களின் ஒரு பகுதி 2 முதல் 25 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பல்வேறு வீதங்களின் கீழ் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களின் சரியானதன்மையை திருப்திகரமாக பரிசோதிக்க முடியாதிருந்தது.

(கொ) பெல்வத்த பிரிவின் களஞ்சியத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பொருட்களின் கொள்விலைக்கு பதிலாக அந்த பொருட்களின் தொகுதியில் இறுதியாக கொள்வனவு செய்த விலைக்கு கணக்குகளில் பதிவு செய்து அந்த வேறுபாட்டினை மதிப்பீட்டு சீராக்கல் கணக்கின் ஊடாக நிதிக்கூற்றுக்களின் செலவினத்திற்கு சீராக்கப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது அந்த விதத்தில் 04 செலவினத் தலைப்புகளுக்கு ரூபா 2,065,100 சேகரிக்கப்பட்டிருந்ததுடன், 06 செலவினத் தலைப்புகளில் ரூபா 2,287,509 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், விலைகள் மாற்றமடைந்தமையின் அடிப்படையில் கிடைத்த வருமானமாக விற்பனைக் கிரயம், நிலைய மற்றும் நிர்வாக செலவினங்கள் மற்றும் பயிற்சி செலவினங்களின் ரூபா 230,254,054 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்கீட்டு மென்பொருளில் நிலவும் குறைபாடு காரணமாக இந்த கணக்குகள் சீராக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் அந்தந்த செலவின விடயங்களில் சரியான செலவினம் பிரதிபலிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(கோ) 2014 யூன் 30 ஆந் திகதி ரூபா 42,529,510 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு 2018 யூலை 07 ஆந் திகதி நெருப்பினால் அழிவடைந்திருந்த பெல்வத்த பிரிவின் சீனியை கட்டிகளாக மாற்றும் ஆழனகைஉயவழைெ யுரவழஅயவழைெ குயஉவழசல ீடயவெ எனும் பெயருடைய இயந்திரத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து கோரப்பட்ட ரூபா 40,430,655 ஆன நட்டஈட்டுத் தொகையிலிருந் 2019 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 12,653,693 இல் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படாது, நிதி நிலைமைக் கூற்றில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த தீயினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பயன்படுத்தப்படாத இந்த இயந்திரத்தின் கிரயத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வருடாந்தம் 5 சதவீதம் வரையிலும் ரூபா 2,126,475 ஆன பெறுமானத் தேய்வு ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கௌ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக பெல்வத்த பிரிவினால் செலுத்த வேண்டிய பொருளாதார சேவை வரி ரூபா 31,828,247 இற்காக கணக்குகளில் ஒதுக்கங்களை மேற்கொண்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ச) 2015/2016 மற்றும் 2016/2017 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய வருமான வரிப் பொறுப்பு ரூபா 225,689,280 எனுமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணினிக் கட்டமைப்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த வரிப் பொறுப்பானது ரூபா 40,435,876 ஆனமையால் ரூபா 185,253,404 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(சா) கம்பனியின் முன்னைய உரிமையாளருக்கு உரித்தான 20 உழவு இயந்திரங்கள் பெல்வத்த பிரிவினால் 2011 நவம்பர் முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான 98 மாத காலப்பகுதியினுள் பயன்படுத்தியமைக்காக மாதமொன்றுக்கு ரூபா 460,274 படியாக ரூபா 45,106,891 கூட்டுத்தொகை செலுத்த வேண்டியதாகவும், அந்த செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 18,135,593 தொகை உழவு இயந்திரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மற்றும் அதன் உரிமையாளர் பெல்வத்த பிரிவிற்குரிய வீடுகள் பயன்படுத்தப்பட்டமையால் பெற வேண்டிய வாடகைக்கு எதிரீடு செய்யப்பட்ட பின்னர் ரூபா 26,971,297 தொகை அதன் உரிமையாளருக்கு செலுத்த வேண்டியதாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், அந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராமையால், மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அதன் சரியானதன்மை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு, நிதி நிலைமைக்கூற்றில், நிதிச் செயலாற்றல் கூற்றில், உரிமை மூலதனத்திலான கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான உருப்படிகளை மாற்று வழிமுறைகளின் ஊடாக சான்றுபடுத்துவதற்கு அல்லது உறுதிப்படுத்த என்னால் முடியாதிருந்தது. இதன் காரணமாக, நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ள பெறுமதிகள் அல்லது உருப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏதேனம் சீராக்கங்கள் மேற்கொள்ளல் அவசியமானதா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2)(ஈ) பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தனவா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

- இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(னை) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

• 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)(ஈ)(ஐ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், இந்த அறிக்கையின் 1.2(இ)(ஐ),(ஈ),(உ),(ஏ),(க) ஆகிய பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

• 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

• 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் கம்பனி இணங்கியொழுகாதுள்ளமையை.

சட்டங்கள், விதிகள் / கட்டளைகளுக்கான விபரம்	தொடர்பு
(அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தின் 4(ஈ) பிரிவு	2019 திசெம்பர் 01 ஆந் திகதிக்கு முன்னர் உரித்துடைய இந்த சட்டத்தின் கீழ் 2012-2016 காலப்பகுதியினுள் பெல்வத்த பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 92,125,804 ஆன தேசத்தை கட்டியெழுப்பும் வரி (டீவு) உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 26(1) பிரிவு	ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் நாட்கள் கணிப்பிடப்பட்டு பெறுமதி சேர் வரி அதற்கடுத்த மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், 2012-2019 வருட காலப்பகுதியினுள் எத்தனோல் மற்றும் மொலேஷஸ் ஆகியவற்
றின் அடிப்படையில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 27,347,134 தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 அ பிரிவினால் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அமைச்சரால் 2008 சனவரி 25 ஆந் திகதி 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையின் 1 ஆம் பிரிவின் 30 ஆம் கட்டளை	சீனி உற்பத்தி அல்லது சீனியை சுத்திகரித்தல் தொடர்பில் பெல்வத்த மற்றும் செவனகல தொழிற்சாலைகளுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
(i) 5.2.5 ஆம் பந்தி	நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று குறித்த வருடம் ஆரம்பித்து 15 நாட்கள் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட பதிவேட்டின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii)	6.5.1 ஆம் பந்தி	நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 18 மாதங்கள் தாமதித்து 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதியே என்பதுடன், வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(iii)	9.3 ஆம் பந்தி	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. பதவியுயர்வு வழங்கும் நடைமுறை மற்றும் சம்பளப் படிமுறைகளின் சரியானதன்மை தொடர்பில் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிப்பதற்கு அல்லது அது தொடர்பில் அவதானிப்புகளை சமர்ப்பிக்க முடியாதிருந்தது.
(iv)	8.3.3 (அ) பந்தி	நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு 150 நாட்களினுள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மற்றம் இலாபம் பெற்றுள்ள நிறுவனமொன்றுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் 17 மாதம் படியான தாமதித்துள்ள போதும் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிராத போது செவனகல பிரிவின் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஊழியர் ஒருவருக்கு ஒரு மாத சம்பளமாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 13,514,219 ஆன மற்றும் ரூபா 14,448,180 ஆன ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.
(v)	8.3.3 (உ)(ை) ஆம் பந்தி	மிகையூதியம் செலுத்தும் போது ஊக்குவிப்புப் படிகளை செலுத்த முடியாத போதிலும், செவனகல பிரிவின் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஊழியர் ஒருவருக்கு ரூபா 75,000 படியாக மற்றும் பெல்வத்த பிரிவின் ஊழியர் ஒருவருக்கு ரூபா 25,000 படியாகவும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 145,356,250 மற்றும் ரூபா 149,904,111 ஆன ஊக்குவிப்பு படியொன்று திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து ரூபா 9,564,866 ஆன பெறுமதிக்கு ரூபா 3,924,394 ஆன சுங்கக் கட்டணம் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்ட ஆவியாக்கல் இயந்திரம் (நுஎயிழசயவழச) இற்கான உதிரிப்பாகங்கள் (ளுளு வுரடிந) அமைப்புக் குறிப்பீடுகளுடன் இணங்கவில்லை என்பதன் அடிப்படையில் மீள அனுப்பி, 2019 ஆம் ஆண்டின் போது மீள இறக்குமதி செய்யும் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,830,446 ஆன சுங்கக் கட்டணத்தை வழங்குநர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்காமையால் அது கம்பனிக்கு நட்டமாகியிருந்தது. மேலும், அந்த சுங்கக் கட்டணத்தை செலுத்துவதற்குரிய ஆவணங்கள் கம்பனியிடம் இல்லாதிருந்தமையால், அந்த பெறுமதி வெளிநாட்டு கட்டளை முற்பணங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) செவனகல பிரிவினால் ரூபா 27,067,812 ஆன இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்து, 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்த கழிவு நீர் சுத்திகரிக்கும் செயற்திட்டம் மற்றும் ரூபா 2,864,444 ஆன செலவினத்தில் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட, பயன்படுத்தப்படாத குழாய் கிணறு செயற்திட்டம் தோல்வியடைந்துள்ளதுடன், செல விடப்பட்ட தொகையானது பல வருடங்களாக நடைமுறைக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கம்பனிக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) செவனகல பிரிவின் தொழிற்சாலையின் தேவைப்பாட்டுக்காக ரூபா 11,412,646 ஆன தொகைக்கு 2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் மின்காந்த பிரிப்பான் இயந்திரங்கள் (நுடநஉவசழ ஆயபநெவஉை ளுநியசயவழச) இயந்திரம் நல்ல நிலையில் காணப்படுவதாக கம்பனியின் பொறியியலாளரால் சான்றிதழ் வெளியிடப்படாத காரணத்தால், 2021 ஆகஸ்ட் மாதமளவில் 03 வருட காலமாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது, பயன்படுத்தப்படாது காணப்படுவதால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாகியிருந்ததுடன், செலுத்திய தொகையை மூலதனமாக்கப்படாது வெளிநாட்டு கொள்வனவு முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) செவனகல பிரிவிற்குரிய காணியில் 03 கட்டிடங்கள் இரு வியாபாரிகளுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது அல்லது கட்டணங்களை அறவிடப்படாது, தமது வியாபார பணிகளை மேற்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு முதல் வசதியேற்படுத்தி நீர் விநியோகிப்பதற்காக ரூபா 1,279,792 ஆன கட்டணமும் கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) செவனகல பிரிவிற்காக பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது கட்டளைகளுடன், அந்த கட்டளைகளுக்குரிய மொத்த தொகையும் முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன், 01 முதல் 07 வருடங்கள் வரையான காலத்தினுள் 21 உள்நாட்டு வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 12,965,197 ஆன முற்பணங்கள் மற்றும் 35 வெளிநாட்டு வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,524,060 ஆன முற்பணங்கள் 2021 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே, இந்த பொருட்களை இருப்பு பட்டியலில் உள்ளடக்கி பொருள் பெறுவனவு பத்திரங்களை வழங்குதலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) செவனகல பிரிவினால் காபன் டயோக்சைட் வாயு உற்பத்தி செய்து 01 கிலோ கிராம் ரூபா 25 இற்கு விற்பனை செய்வதற்காக, 20 வருட காலப்பகுதிக்காக 2014 ஆம் ஆண்டின் போது "இன்டஸ்டிரியல் கேஸஸ் தனியார் கம்பனி" உடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், "லங்கா காபனிக் இன்டஸ்டிரீஸ்" எனும் பெயருடைய மற்றுமொரு கம்பனிக்கு வாயு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, வாயு விற்பனைக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பெற வேண்டிய ரூபா 7,473,696 தொகை உள்ளடங்களாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 17,770,596 தொகையை அறவிடுவதற்கும், 05 வருட காலமாக விற்பனை விலையை திருத்தியமைப்பதற்கும், உற்பத்தி செய்யப்பட்ட காபன் டயோக்சைட் வாயுவின் அளவினை அளவிடும் பொருட்டு மானியொன்றை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால், காபன் டயோக்சைட் வாயு விற்பனை மூலம் முறையான வருமானம் கிடைப்பதாக திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(எ) கம்பனியின் தொழிற்சாலைகளின் உச்ச இயலளவானது 897,500 மெற்றிக் தொன்களாக காணப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டின் கரும்பு விநியோகம் 571,370 மெற்றிக் தொன்களானமையால், மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது தொழிற்சாலைகளின் இயலளவில் 63 சதவீதமாகும். கரும்பு விநியோகம் குறைவடைந்தமை கம்பனியின் தொழிற்சாலைகளின் உச்ச இயலளவு மட்டத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(ஏ) 2018 ஆம் ஆண்டின் போது 9,787,259 லீட்டர்களாக காணப்பட்ட கம்பனியின் எத்தனோல் உற்பத்தியானது, கேள்வி குறைவடைந்த காரணத்தால் 2019 ஆம் ஆண்டின் போது 5,212,560 லீட்டர்கள் வரையிலும் 47 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஐ) பெல்வத்த சீனி கைத்தொழிற்சாலையின் வருடாந்த சீனி உற்பத்தி 2018 ஆம் ஆண்டின் போது 28,061 மெற்றிக் தொன்களாக காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டளவில் 25,162 மெற்றிக் தொன்களாக 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. கரும்பு விநியோகம் மற்றும் அவற்றின் சீனியின் விகிதம் குறைவடைந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்த போதிலும், அவற்றை அதிகரிப்பதற்று உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) செவனகல பிரிவிற்கரிய கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய மொத்த காணியின் பரப்பளவு 4,215 ஹெக்டேயர் பரப்பளவில் காணப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பயிரிட்டிருந்த மொத்த காணியின் பரப்பளவானது 3,240 ஹெக்டேயர்கள் ஆகும். அதன் பிரகாரம், தொழிற்சாலையின் செயற்பாடுகளை உச்ச அளவில் பேணுவதற்கு போதிய அளவிலான கரும்பு விநியோகத்தினை வழங்கக்கூடிய காணிகள் செவனகல பிரிவிற்கு சொந்தமாக இருந்த போதிலும், அந்த காணிகளில் கரும்பு பயிரிட்டு தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனியின் காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 17,932,382 ஆன போதிலும், வங்கி மேலதிகப்பற்று மீதியானது ரூபா 614,111,255 ஆனமையால், தேறிய காசு மீதியானது ரூபா 596,178,873 ஆன மறைப் பெறுமதியை கொண்டிருந்ததுடன், அத்திகதியில் உள்ளபடியாக பெல்வத்த பிரிவின் மற்றும் செவனகல பிரிவின் தேறிய காசு மீதிகள் முறையே ரூபா 555,465,760 மற்றும் ரூபா 17,768,995 எனுமாறு மறைப் பெறுமதியை கொண்டிருந்தமை அதற்கு காரணமாக அமைந்திருந்தது. மீளாய்வாண்டின் வங்கி மேலதிகப்பற்று வட்டி ரூபா 75,470,783 ஆக காணப்பட்டதுடன், முன்னைய வருடங்களிலும் இந்த நிலைமையே காணப்பட்டது. மேலும், வங்கி மேலதிகப்பற்று வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக பெல்வத்த பிரிவிற்கு சொந்தமான ரூபா 829,068,708 ஆன அனைத்து நிலையான வைப்புகளும், செவனகல பிரிவிற்கு சொந்தமான ரூபா 285,000,000 ஆன 07 நிலையான வைப்புகள் பிணையாக வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) கரும்பு விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 62,850,641, நானாவித கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,226,088 மற்றும் 17 வியாபார கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,462,912 எனுமாறு ரூபா 67,539,641 கூட்டுத்தொகை 02 முதல் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதிருந்தமைக்கான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளின் கரும்பு விவசாயிகளிடமிந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய, முறையே ரூபா 1,027,194,679 மற்றும் ரூபா 230,202,208 தொகையான கடன் மீதியினுள் 02 முதல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதுள்ள, முறையே ரூபா 500,580,561 மற்றும் ரூபா 56,356,770 ஆன கடன் மீதிகள் நிலவின. கடன் தவணைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமை, அத்துமீறிய பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை மீண்டும் கரும்பு பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமை இதற்கு காரணமாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பெல்வத்த பிரிவு 2011 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 37,982,159 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 02 செயற்திட்டங்களும், 2011-2015 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியினுள் ரூபா 55,915,889 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 17 செயற்திட்டங்களும் பணிகள் நிறைவு செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது. இந்த செலவினம் பிரச்சினைக்குரியது மற்றும் விளைவற்றது என்பதும், செலவினங்கள் தொடர்பில் எதுவித பரிசோதனை நடைமுறைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) பெல்வத்த பிரிவின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வழியிலுள்ள இருப்பினுள் 05 முதல் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 4,904,160 ஆன இருப்பு உள்ளடங்கியிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) பெல்வத்த பிரிவினுள் கொல்ப் விளையாட்டரங்கினை நடாத்திச் செல்லல் மற்றும் அதன் பராமரிப்பு சம்பளங்களை செலுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 6,232,595 மற்றும் ரூபா 6,618,123 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், விளையாட்டரங்கம் கொல்ப் விளையாட்டிற்காக பயன்படுதப்பட்டிராமையால் செலவிடப்பட்ட பணம் விளைவற்றதாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(எ) பெல்வத்த பிரிவு 2013 ஆம் ஆண்டின் போது குத்தகை வசதியின் அடிப்படையில் ரூபா 128,910,000 பெறுமதியுள்ள கிரேன் இயந்திரமொன்றை கொள்வனவு செய்யப்பட்டு, அதற்காக ரூபா 120,750,000 ஆன தொகையை செலுத்தி அதற்கு தேவையான மின்சாரத்தினை விநியோகிப்பதற்கு ரூபா 2,254,850 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், வழங்குநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் அந்த இயந்திரம் தொழிற்சாலையில் நிறுவப்படாத காரணத்தால் கொள்வனவு செய்த திகதி முதல் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது காணப்பட்டமையால் செலவிடப்பட்ட ரூபா 123,004,850 ஆன தொகை விளைவற்றதாகியிருந்தது.

(ஏ) செவனகல பிரிவின் 2017 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2019 யூன் 30 ஆந் திகதி வரையான காலம் வரையிலும் ரூபா 4,698,431 தொகையும், பெல்வத்த பிரிவின் 2019 சனவரி 01 ஆந் திகதி முதல் மார்ச் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்காக ரூபா 175,642 தொகையுமாக மொலேஷஸ் உற்பத்தியின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரித் தொகை தாமதமாகியமையால் மதுவரித் திணைக்களத்திற்கு செலுத்தியிருந்த ரூபா 5,874,073 ஆன தாமதக் கட்டணம் முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஐ) பெல்வத்த பிரிவினால் முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு முதல் விவசாயக் கடன்களுக்காக அறவிடப்படும் 12 சதவீத வட்டி வருமானத்தில் 3 சதவீதம் விவசாயிகளின் நலன்புரி விடயங்களுக்காகவும், 1 சதவீதமானது நிறுவனத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுகளின் பிரகாரம் விவசாயிகளின் நலன்புரிக் கணக்கு ரூபா 91,061,803 தொகையும், நிறுவனத்தின் நலன்புரிக் கணக்கு ரூபா 30,419,099 தொகையுமாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து எதுவித நலன்புரி பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஒ) பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் 24 கடன் கொடுத்தோர் கணக்குகளின் கீழ் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுவோருக்கு 2002 முதல் 2018 வரையான காலத்திற்கு உரியதாக ரூபா 121,664,307 தொகை செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த மீதி தீர்ப்பனவு செய்யப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்குரிய 1,379 கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 188,485,761 தொகை 01 முதல் 10 வருடங்கள் வரையான காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படுகின்றமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(ஔ) கம்பனிக்கு சுவீகரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களின் இருப்பு மீதியொன்று காலாவதியான இருப்பாக ரூபா 9,251,437 வரை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இருப்பினை இனங்காணும் இயலுமை காணப்படவில்லை.

(க) பெல்வத்த பிரிவினால் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு 124 வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 11 முதல் 20 வருடங்கள் வரையான காலம் கடந்துள்ள ரூபா 5,990,286 ஆன முற்பணத் தொகையும், 07 பேரேட்டுக் கணக்குகளின் 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 284,102 கூட்டுத்தொகை மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஊழியர் சமூக மண்டபத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் ரூபா 1,021,657 எனுமாறு ரூபா 7,296,045 கூட்டுத்தொகை 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 2012 ஆம் ஆண்டின் போது "செவனகல சுகர் இன்டஸ்டிரீஸ்" நிறுவனத்தை அரசாங்கத்திற்கு சுவீகரிக்கும் சந்தர்ப்பத்தில் அந்த நிறுவனத்தின் பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு கடப்பாடொன்று இல்லாதிருந்த போது, அந்த நிறுவனத்திற்கு சொந்தமான மின்சாரம், நீர், கரும்பு ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காக அரச நிறுவனங்களில் மற்றும் விவசாயிகளுக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 38,096,521 தொகை மற்றும் வெளியேறிய ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களின் வைப்புகளை மீள செலுத்துவதற்காக ரூபா 383,833 எனுமாறு ரூபா 38,480,354 கூட்டுத்தொகை 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கம்பனியினால் உரிய தரப்பினருக்கு செலுத்தி தீர்க்கப்பட்டிருந்த காரணத்தால் சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது.

(கி) அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்காக அரசியல்வாதியொருவருக்கு வழங்கப்பட்டுள்ள செவனகல பிரிவின் உத்தியோகபூர்வ இல்லத்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 2020 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையிலுமான காலத்திற்கு உரியதாக மாதமொன்றிற்கு ரூபா 1,000 படியாக ரூபா 132,000 ஆன வீட்டு வாடகையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. மேலும், மாதமொன்றுக்கு ரூபா 2,000 படியான அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு 2016 ஏப்ரல் மாதத்தின் போது உடன்படிக்கை காலம் நிறைவடைந்திருந்த வீடொன்றினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) 1998 ஆம் ஆண்டு எழுதுவினைஞர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவரின் கோரிக்கை மற்றும் சேவை அனுபவம் ஆகியவற்றை மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டு முகாமையாளர் (நிதி) பதவி வரையிலும் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்ததுடன், உரிய நியமன உத்தியோகத்தரான் தலைவரினால் உரிய முறையில் நியமனம் வழங்காது அந்த பெண் உத்தியோகத்தர் பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவியில் பதிற்கடமைக்காக ரூபா 15,000 ஆன பதிற்கடமை படியொன்று, ரூபா 15,000 ஆன எரிபொருள் படியொன்று மற்றும் ரூபா 50,000 ஆன வாகனப் படியும் 2018 மே மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாதாந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(கு) செவனகல பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 10 வகைகளுக்குரிய 300 உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையை நடப்பிற்கு பொருந்தும் வகையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ஆரம்பம் முதல் அறவிடப்பட்ட ரூபா 20 முதல் ரூபா 85 இற்கு இடைப்பட்ட மாதாந்த வாடகையொன்று அறவிடப்பட்டவாறு காணப்பட்டது.

(கூ) அரசின் வீட்டு வாடகைக்காக நீர், மின்சாரம் மற்றும் எரிவாயுவிற்காக உத்தியோகத்தரினால் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது செவனகல பிரிவினால் மின்சாரம் மற்றும் நீருக்காக முறையே ரூபா 712,671 மற்றும் ரூபா 97,240 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(கெ) உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து அகன்று செல்லப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் செவனகல பிரிவிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றிருந்த 38 ஊழியர்கள் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் வதிகின்றமை அவதானிக்கப்பட்டது.

(கே) கம்பனியின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பிலான பணிகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரத்தினை கையளிக்காது கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல், சான்றுபடுத்தல் ஆகியவற்றை மேற்கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(கை) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2018 சனவரி 01ஆந் திகதி முதல் சீனி மற்றும் சீனியுடன் தொடர்புடைய உற்பத்திகளின் அடிப்படையில் வற் வரி அறவிடுவதிலிருந்து கம்பனி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செவனகல பிரிவினால் தொடர்ச்சியாக அந்த உற்பத்திக்காக வற் வரி அறவிடப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அந்த அறவீடுகள் ரூபா 5,133,694 ஆகும்.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக்கூற்று
2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
வருமானம்	4	7,545,539,093	6,242,954,355
விற்பனைக் கிரயம்		(7,522,967,783)	(5,025,819,435)
மொத்த இலாபம்		22,571,310	1,217,134,920
ஏனைய வருமானம் மற்றும் வருவாய்	5	75,604,257	69,689,588
நிருவாகச் செலவினம்		(1,447,171,687)	(1,261,139,692)
நிதிச் செலவினம்	6	(186,654,036)	(152,670,574)
நிதி வருமானம்	6	223,437,263	271,328,127
வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்)	7	(1,312,212,893)	144,342,369
வருமான வரிச் செலவு	8	(50,160,251)	(307,729,392)
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)		(1,362,373,144)	(163,387,022)
காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி		1,287,797	83,725,670
காலப்பகுதிக்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/ (செலவினம்), தேறிய வரி		(1,361,085,347)	(79,661,352)
பங்கு ஒன்றிற்கான உழைப்பு/(நட்டம்)	9	(13,623,731)	(1,633,870)

37 ஆம் பக்கம் முதல் 57 பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக்கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
நிதி நிலைமைக் கூற்று
2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான

சொத்துக்கள்	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	10	1,871,930,864	1,980,452,307
பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்	8	-	-
		1,871,930,864	**1,980,452,307**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு	11	1,661,529,476	3,282,576,901
உயிரியல் சொத்துக்கள்	12	417,997,013	568,762,078
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறவேண்டியவை	13	366,088,602	297,054,164
முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும்		42,516,288	32,898,652
விவசாயிகளிடமிருந்து வருமதியான கடன்கள்	14	749,583,878	685,880,265
சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வருமதியான தொகை	25.2	21,498,293	19,498,293
முதலீடுகள்	15	1,640,127,712	1,541,789,178
காசும் காசிற்குச் சமமானவையும்	21	17,932,382	55,793,285
		4,917,273,644	6,484,252,815
மொத்தச் சொத்துக்கள்		**6,789,204,509**	**8,464,705,122**
உரிமை மூலதனமும் பொறுப்புகளும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
கூறப்பட்ட மூலதனம்	16	1,000	1,000
அரசாங்க மானியம்	17	4,047,853,339	4,047,990,194
பகிரப்படாத இலாபம்		(436,688,827)	917,567,759
மொத்த உரிமை மூலதனம்		**3,611,165,512**	**4,965,558,953**
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்	8	415,700,268	365,539,736
இளைப்பாறல் நலப் பொறுப்புகள்	19	425,834,244	381,093,042
வட்டிக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள்	18	80,791,974	66,513,088
		922,326,486	813,145,866
நடைமுறைப் பொறுப்புகள்			
வட்டிக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள்	18	652,895,047	1,253,463,373
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	20	1,362,865,724	1,202,378,569
செலுத்த வேண்டிய வருமான வரி		225,689,280	232,307,087
சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நிலுவையான தொகை		14,262,458	(2,148,726)
		2,255,712,509	2,686,000,303
மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்		**6,789,204,509**	**8,464,705,122**

.....
பிரதி பொது முகாமையாளர் – நிதி

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதுடன் சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பணிப்பாளர்

பணிப்பாளர்

29.03.2021
கொழும்பு

37 ஆம் பக்கம் முதல் 57 பக்கம் வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று
2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

	கூறப்பட்ட மூலதனம்	அரசாங்க மானியம்	திரட்டப்பட்ட இலாபங்கள்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2018 சனவரி 1 இல் உள்ளவாறானது	1,000	4,047,990,194	997,226,537	5,045,217,731
அரச மானிய மீள் கொடுப்பனவு	-	-	-	-
ஆரம்ப மீதி சீராக்கல் பதிவு	-	-	2,575	2,575
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-	-	-
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)	-	-	(163,387,022)	(163,387,022)
ஏனைய விரிவான வருமானம்	-	-	83,725,670	83,725,670
மொத்த விரிவான வருமானம்	-	-	(79,661,352)	(79,661,352)
2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	1,000	4,047,990,194	917,567,760	4,965,558,954
அரச மானிய மீள் கொடுப்பனவு	-	-	-	-
ஐந்தொகையின் சீராக்கல் பதிவு / வருமான வரி மீள்திருப்பல்	-	(136,855)	6,828,759	6,691,904
முன்னைய உரிமையாளர் சார்பில் கம்பனியால் செலுத்தப்பட்டது.	-	-	-	-
ஆண்டிற்கான இலாபம்	-	-	(1,362,373,144)	(1,362,373,144)
ஏனைய விரிவான வருமானம்			1,287,797	1,287,797
மொத்த விரிவான வருமானம்	-	-	(1,361,085,347)	(1,361,085,347)
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	1,000	4,047,853,339	(436,688,828)	3,611,165,511

37 முதல் 57 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளார்ந்த பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
காசுப்பாய்ச்சல் கூற்று
2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

	குறிப்பு	2019	2018
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்		ரூபா	ரூபா
வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)		(1,312,212,893)	144,342,369
சீராக்கங்கள் :			
பெறுமானத்தேய்வு	10	325,760,776	348,266,476
ஆதன், இயந்திர உபகரண நட்டம்		-	45,144
நிதி வருமானம்	6	(223,437,263)	(271,328,127)
நிதிச் செலவு	6	186,654,036	152,670,574
ஓய்வூதிய நலன் பொறுப்பிற்கான ஏற்பாடு	19	68,292,860	68,682,140
விவசாயிகளின் கடன்களுக்கான ஏற்பாடு	11	28,950,504	(42,765,210)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		(925,991,981)	399,913,366
பொருட்பட்டியல்களிலான (அதிகரிப்பு) /குறைவு		1,621,047,425	(1,392,937,550)
வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப் பெறவேண்டியவைகளிலான அதிகரிப்பு		(80,652,074)	(161,354,101)
விவசாயிகளிடமிருந்தான கடன்களிலான குறைவு		(92,654,117)	148,495,763
தொடர்புடைய தரப்பினர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை அதிகரிப்பு /(குறைவு)		16,411,184	-
வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளிலான அதிகரிப்பு/(குறைவு)		160,487,155	(86,170,532)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு		698,647,592	(1,092,053,053)
செலுத்தப்பட்ட ஓய்வூதிய நலன் பொறுப்பு	19	(22,263,861)	(29,368,561)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு		676,383,731	(1,121,421,614)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்			
ஆதன், இயந்திர உபகரணக் கொள்வனவு		(217,239,329)	(125,508,483)
நிலையான வைப்புக்களின் முதலீடுகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)		(98,338,534)	(80,550,486)
உயிரியல் சொத்துக்களில் முதலீடு		150,765,065	9,080,916
பெறப்பட்ட நிதி வருமானம்	6	223,437,263	271,328,127
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள்		58,624,465	74,350,074
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்			
பெறப்பட்ட கடன்கள் / நிதிக் குத்தகை		150,000,000	588,950,000
கொடுத்து தீர்க்கப்பட்ட கடன்கள்	18	(715,688,459)	(13,796,004)
நிதி குத்தகை கடப்பாடுகளின் கீழான பிரதான கொடுப்பனவுகள்	18	30,757,085	(45,971,258)
செலுத்தப்பட்ட வட்டி	6	(186,654,036)	(152,670,574)
நிதி செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள்		721,585,410	376,512,164
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு /(குறைவு)		13,422,787	(670,559,376)
வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவை	21	(609,601,660)	60,957,716
வருட இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவை	21	(596,178,873)	(609,601,660)

37 முதல் 57 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளாந்த பகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

1. கூட்டமைப்புத் தகவல்

1.1 பொதுவானவை

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதோர் நிறுவனமாகும். அரசாங்கத்தினால் அதிகாரமளிக்ப்பட்ட பின்னர் கம்பனியானது தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக நிறுவப்பட்டது. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல 27, மெல்போன் அவெனியூ, கொழும்பு – 04 எனும் முகவரியில் அமைந்துள்ளதுடன் அதன் பிரதான வியாபார இடம் எம்பிலிப்பிட்டியவிலும் புத்தளவிலும் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர், பெல்வத்தை சீனிக் கைத்தொழில் நிறுவனத்தினதும் செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனத்தினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி கைமாற்றப்பட்டன.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

நிதிக் காலப்பகுதியின் போது, கரும்பு வேளாண்மை, சீனியையும் எதனோலையும் உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

1.3 விநியோகத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

பணிப்பாளர் சபையால் 2021 மார்ச் 29 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் விநியோகத்திற்கென அதிகாரமளிக்கப்பட்டன.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

2. பொதுக் கொள்கைகள்

2.1 தயாரிப்பு அடிப்படை

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக்கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானம், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சற் கூற்றுக்களையும் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

வேறொரு முறையில் குறிப்பிடப்பட்டாலன்றி கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.1.1 இணங்கி ஒழுகுதல் கூற்று

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் சமர்ப்பணமும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியுள்ளன.

2.1.2 தொடர்ந்து இயங்கும் நிலை

நடக்கப் போவதை முன்னறியக்கூடிய எதிர்காலத்தில் இயங்கும் ஸ்தாபனமாகத் தொடர்ந்தும் இருப்பதற்கான கம்பனியின் இயலுமை குறித்த மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் அவர்களுக்கு கலைப்பதற்கோ அல்லது வர்த்தகத்தை நிறுத்துவதற்கான நோக்கம் எதுவுமில்லை.

2.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் குறித்த சுருக்கம்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கம்பனியால் பின்வரும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டன.

2.2.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் கம்பனியால் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை ரூபாவில் (டுமுசு) மேற்கொள்ளப்பட்டு வருவதனாலும், நிறுவனத்துடன் தொடர்புடைய அடிப்படையான நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளின் பொருளாதார சாரம்சத்தை இவ்வாறான நிலை திறம்பட பிரதிபலிக்கும் என்பதனாலும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலைத்து நிர்ணயிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய விகிதத்தில் மாற்றப்பட்டு வருகின்றன. அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயங்கள் வகைப்படுத்தப்படும் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் வகைப்படுத்தப்படும் நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், அத் திகதியில் நிலைத்து நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்று வீதத்தைக் கொண்டு இலங்கை ரூபாவில் மாற்றப்பட்டு வருகின்றன. நாணய மாற்றலில் எழுகின்ற அந்நிய செலாவணி வேறுபாடுகள், இலாப நட்டக்கூற்றில் கருத்திற்கொள்ளப்படுகின்றது.

நாணய மாற்றலில் எழுகின்ற அந்நிய செலாவணி மாற்றத்திலான வேறுபாடுகள், இலாப நட்டக் கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் நாணயமற்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நாணய விகிதத்திலேயே மாற்றப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப் பெறுமதி அளவிடப்படும் நாணயமற்ற விடயங்கள், நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணயப் பரிமாற்ற விகிதங்களைக் கொண்டே மாற்றப்பட்டுவருகின்றன. நூாணயமற்ற விடயங்களை மீள மாற்றுவதால் உருவாகும் இலாபம் அல்லது நட்டமானது விடயத்தின் நியாயப் பெறுமதியிலான மாற்றத்தின் இலாபம் அல்லது நட்டம் குறித்த அங்கீகாரமாகவே கருதப்பட்டு வருகின்றது. (அதாவது, ஏனைய விரிவான வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்படும் நியாயப் பெறுமதியிலான இலாபம் அல்லது நட்டத்தை ஏற்படுத்தும் பொருட்கள் மீதான மாற்று வேறுபாடுகளும் முறையே விரிவான வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டம் ஆகியவற்றிலும் அடையாளங் காணப்பட்டு வருகின்றன.)

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

2.2.2 வருமான அங்கீகாரம்

குறித்த வருமானம் கம்பனிக்கு பொருளாதார நன்மைகள் கிட்டுமெனவும் நம்பக்கூடிய அளவில் அளவிடப்பட்டு எப்போது கொடுப்பனவு செய்யப்படுகின்றதென்பதைக் கருத்திற் கொள்ளாது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு விதிமுறைகளையும், வரிகள் அல்லது தீர்வைகள் நீங்கலாக கருத்திற்கொண்டே பெறப்பட்ட அல்லது பெறக்கூடிய நலனின் நியாயப் பெறுமதியிலேயே அளவிடப்படுகின்றது. கம்பனி, முதல்வர் அல்லது முகவராக செயற்படுகின்றதா என்பதை நிர்ணயிப்பதற்கான குறிப்பிடக்கூடிய பிரமாணங்கள் மீதான தனது வருமான ஒழுங்குகளை மதிப்பிட்டு வருகின்றது. தனது வருமான ஒழுங்குகள் அனைத்திலும் தான் முதல்வராகவே செயற்படுவதாக கம்பனி முடிவிற்கு வந்துள்ளது. கீழே விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அங்கீகாரப் பிரமாணங்களும் வருமானம் அங்கீகரிக்கபடுவதற்கு முன்னர் உகந்தவாறு பின்பற்றப்பட வேண்டும்.

பொருட்களின் விற்பனை

முக்கியமான இடர்களும் பொருட்களின் உரிமத்தின் குறித்த வெகுமானங்களும் பொருட் கொள்வனவாளரிற்கு மாற்றப்படும் நிலையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மீது உரிமத்திலோ அல்லது பயனுறுதியான கட்டுப்பாடு இல்லாத நிலையில் பொருட்கள் விற்பனையில் இருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

வட்டி வருமானம்

காலக்கழிவின் அடிப்படையில் அளவிடப்படும் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட்ட செலவில் அளவிடப்படும் அனைத்து நிதிசார் பத்திரங்கள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்குமென வகைப்படுத்தப்படும் வட்டி தரும் நிதிசார் பொறுப்பின் நிகர தேறிய பெறுமதிக்கு, நிதிசார் பத்திரத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலப் பகுதியொன்றின் மூலம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவை அல்லது வருவாய்களைத் சரியான முறையில் தள்ளுபடி செய்யும் பயனுறுதிமிக்க வட்டி விகிதத்தைப் (இ.ஐ.ஆர்) பாவித்து வட்டி வருமானம் அல்லது செலவினம் பதிவுசெய்யப்படுகின்றது. வட்டி வருமானமானது, இலாப நட்டக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

சொத்துக்களைப் பராதீனம் செய்யும் வகையில் ஏற்படும் வருவாய்களும் நட்டங்களும்

சொத்துக்கள் பராதீனம் செய்யும் வகையில் ஏற்படும் இலாப, நட்டங்களை சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகைகளுடன் தேறிய விற்பனை முன்னெடுப்புக்களை ஒப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுவதுடன், இலாப நட்டக் கூற்றில் "ஏனைய தொழிற்படும் வருமான" த்திற்குள் வரும் தேறியவையாக அடையாளம் காணப்படுகின்றன. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் விற்கப்படுகையில், மீள்மதிப்பீட்டு மிகை ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் பிடித்துவைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்படுகின்றன.

2.2.3 வரி

நடைமுறை வரிகள்

வருமான வரிச் செலவானது, நடைமுறை வருமான வரியை உள்ளடக்குகின்றது. உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புடைய வருமான வரிச் செலவு தவிர்ந்தவை இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நடைமுறை வரியானது, அறிக்கையிடப்படும் திகதியில் சட்டமாக்கப்பட்ட வரி விகிதங்களைக் கொண்டு, காலப்பகுதிக்கான வரியிடத்தக்க வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் வரியும் முன்னைய வருடங்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் சீராக்கப்பட்ட வரியுமாகும்.

விற்பனை வரி

வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துக்கள் விற்பனை வரியின் தேறிய தொகையினை அங்கீகரிக்கின்றன, தவிர:

- சொத்துக்கள் அல்லது சேவைகளை வாங்கும்போது விற்பனை வரி ஏற்படும் போது விற்பனை வரியானது, குறித்த சொத்தின் பாகமாக அல்லது விலையுயர்ந்த பொருளின் பாகமாக பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்படுகின்றமை.
- விற்பனை வரியின் அளவுடன் குறிப்பிடப்பட்ட பெறத்தக்கவைகள் மற்றும் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்படும்.

வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறவிடக்கூடிய அல்லது அவர்களுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியின் நிகர தொகை நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய அல்லது செலுத்த வேண்டியவைகளின் பாகமாக உள்ளடக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி, நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த கொண்டு செல்லும் தொகைக்கும், வரிவிதிப்பு நோக்கிற்கான தொகைகளுக்குமிடையேயான தற்காலிக வேறுபாட்டு வரி பயனுக்காக வழங்கும் ஐந்தொகைப் பொறுப்பு முறையைப் பயன்படுத்தியே வழங்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

2.2.4. செலவுகள்

வியாபாரத்தை நடாத்துவதால் ஏற்படும் செலவுகள் அக்காலப்பகுதிக்கான இலாபத்தை நிர்ணயிப்பதற்காக வருமானத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.

திருத்தங்கள், மற்றும் புதுப்பித்தல்கள் என்பன செலவுகள் ஏற்பட்ட காலப்பகுதியின் இலாப நட்டத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.

2.2.4.1. இரவல் கிரயம்

இரவல் கிரயம் அது ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு தகுதி உள்ள சொத்தின் உற்பத்தி அல்லது சுவீகரிப்பு கட்டட அமைப்பு என்பனவற்றின் நேரிடையான வரையறை என்பனவற்றைத் தவிர ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. அச் சூழ்நிலையில் அவை சொத்தின் செலவில் ஒரு பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது.

2.2.4.2. நிதிச் செலவு

